ஸ்ரீ:

# ஸ்ரீ வைஷ்ணவ வருஷாப்தீக வைதீக க்ரமம்

1. ஊன ஆப்தீகம் 2. ஆப்தீக ஸோதகும்பம் 3.வருஷ ஆப்தீகம் 4. ஆப்தீக ததீயாராதனம்

**ஆப்தீக ததீயாராதனம்:** மாசிகங்கள் நடந்து கொண்டுள்ள 12 மாதமும் மற்ற பந்துக்களை அழைத்து எந்த விழாவும் நம் அகத்தில் பண்ண முடியாது. மேலும் ஆப்தீகம் என்ற சிராத்த அன்னத்தை எல்லா உறவினர் அல்லது நண்பர்களுடனும் பகிர்ந்து கொள்ள முடியாது. எனவே இந்த ஆப்தீக நிறைவை ஒரு சுப நாளாக பாவித்து எல்லா பந்துக்களையும் வரவழைத்து போஜனம் செய்து வைப்பது வழக்கமானது. இதற்கு எந்தவிதமான நாள் நக்ஷத்திரமும் பார்க்கத் தேவையில்லை. ஆப்தீகத்தன்று மறுநாள் செய்து கொள்ள வேண்டியது. ததீயாராதனத்திற்கு வந்த பெரியவர்களிடம் அக்ஷதை கொடுத்து பஞ்சாதி சொல்லி ஆசீர்வாதம் பெற்றுக் கொள்வது மட்டுமே இதிலுள்ள வைதீக அம்சம். இது ஸபிண்டீ கரணத்திற்கு அடுத்த நாள் பண்ணும் சுப ஸ்வீகாரத்தை ஒத்தது அல்ல. சிலர் தங்களுடைய பல சௌகர்யங்களை முன்னிட்டு வேத ப்ரபந்த ஸேவாகாலங்களை இந்த தினத்தில் வைத்துக் கொள்கிறார்கள். இது தவறில்லை ஆயினும் மரபு மீறிய (ஸம்ப்ரதாயம் மீறிய) செயலாகும்.

**வருஷ ஆப்தீகம் :** பரமபதித்த (இறந்த) தமிழ் மாதம் பக்ஷம் திதி இவற்றை சரியாக குறித்து வைத்துக் கொண்டு ஒவ்வொரு வருடமும் அதே தமிழ் மாதத்தில் அதே பக்ஷத்தில் பஞ்சாங்கத்தில் சிராத்த திதி என்ற தலைப்பின் கீழ் திதியை கண்டு பிடித்து அந்த நாளில் பண்ணவேண்டும். (பௌர்ணமிக்கு அடுத்த நாளிலிருந்து அமாவாசை வரை க்ருஷ்ண பக்ஷம். அமாவாசைக்கு அடுத்த நாளிலிருந்து பௌர்ணமி வரை சுக்ல பக்ஷம்.)
வருடா வருடம் விச்வேதேவர், பித்ரு, விஷ்ணு என 3 ஸ்வாமிகளை வரித்து ச்ராத்தம் பண்ணுவதே உசிதமாயினும் வருஷாப்தீகத்திற்கு மட்டுமாவது 3 ஸ்வாமிகளை வைத்து முறைப்படி பண்ணப்பட்டு வருகிறது. ஸேவா காலம், புண்யாஹவாசனம், ஔபாசனம் (ஸமிதாதானம்), பார்வண ச்ராத்தம் அனைத்தும் உண்டு.

**ஊன ஆப்தீகம்:** 345வது நாளைக்கு மேல் 360வது நாளைக்குள் ஆப்தீக நாளைக்கு முன்னதாக செவ்வாய், வெள்ளி, சனி தவிர்த்து ஒரு நாளில் பண்ணவேண்டியது. ஊன ஆப்தீகத்திற்கு 2 ஸ்வாமிகள். புண்யாஹவாசனம், ஔபாசனம் (ஸமிதாதானம்), பார்வண ச்ராத்தம் அனைத்தும் உண்டு.

**ஆப்தீக ஸோதகும்பம்:** ஸோதகும்பம் என்பது வருடம் 365 நாளும் பண்ணலாம். பித்ருக்களின் ஸன்னிவேசத்தை முதல் நாளே ஏற்படுத்திக் கொள்வதற்காக ஆப்தீகத்திற்கு முதல்நாள் பண்ணப்படுகிறது. ஒரு வேளை ஊன ஆப்தீகம் செவ்வாய் வெள்ளி சனியில் வருவதை தவிர்க்க நேரிடும்போது ஊன ஆப்தீகத்திற்கும் ஒரு நாள் முன்னதாகவே ஸோதகும்பம் பண்ணலாம். ஒரு ஸ்வாமி மட்டும் போதும். இதற்கு அக்நி கார்யம் எதுவுமில்லை. புண்யாஹவாசனம், சங்கல்ப ச்ராத்தம் மட்டும் உண்டு.

### வாங்கவேண்டிய முக்கிய வஸ்துக்கள்

| | |
|---|---|
| 6 ஸ்வாமிகளுக்கும் | 6 ஜோடி வேஷ்டி உத்திரியம் |
| | 6 சொம்பு 6 குளபாத்திரம் |
| | 6 செட் வெத்திலை, பாக்கு, ஏலம், கிராம்பு இத்யாதிகள் |
| | 6 பேருக்கும் தக்ஷிணை |

ப்ரும்மா (ஆப்தீகத்திற்கு மட்டும்) 10க்கு 6 திருநாகேஸ்வரம் வேஷடி நல்லதாக 1 ஜோடி
வாத்யார் தவிர வேறு ஒருவரை ப்ரும்மாவாக வரித்தால் வாத்யாருக்கு தனியாக வாங்கவும்.

மற்றபடி வழக்கம்போல் ச்ராத்தத்திற்கு தேவையான வெத்திலை, பாக்கு, பழம், புஷ்பம், மாவிலை, பசும்பால், சந்தனம், திருத்துழாய், அமுந்திரி (அரிசி), நெய், விராட்டி, சுள்ளி கற்பூரம், தீப்பெட்டி, பெருமாள் பாத்திரங்கள், சொம்பு, ஸ்தாலி, மணைகள், விசிறி, ஔபாசனக்கால் அல்லது 8 செங்கல் சிறிது மணல் இவை தயார் செய்து வைத்துக்கொள்ளவேண்டியது.